உ

சிவமயம்.

சற் குருப்யோ நம:

சுக்ல யஜுர் வேதத்தில் உள்ள

மண்டலப் பிராஹ்மணோபநிஷத்தும்,

சதாநந்த அவதூத சுவாமிகள்

அருளிச் செய்த,

ராஜ யோக பாஷ்யமும்.

இவை

கோவிலூர்,

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகளின்

பாத சேகர ராய,

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்களால்

தமிழில், வசந வடிவமாக

மொழி பெயர்க்கப்பட்டு,

அச்சியற்றப் பெற்றன.

 [அணா நான்கு.

பீடிகை.

சுக்ல யஜுர் வேத சம்பந்தமான இம்மண்டலப் பிராஹ்ம ணோபநிஷத் அஷ்டோத்ரசத உபநிஷத்துக்களின் அந்யதம மாம்; தாண்ட முடியாத சம்சார சக்கரத்தை நிவிர்த்தி செய்யும் மகா பல யோகத்தையுடைய ராஜயோகத்தை ஜிஞ்ஞாசுக்கட்கு நல்ல சூட்சுமதர சாட்சாத்கார ஸ்தாபந உபதேசத்தை விதித் துப் பிரகாசிக்கின்றது.

ஆதித்ய மண்டலத்திலுள்ள புருஷனுக்கும் யாஞ்ஞவல்கி யருக்கும் பிரஸ்னோத்ர ரூபமாகப்பிரவிர்த்தியாகலானும், பிராஹ் மண ரூபத்தாலும் இதற்கு மண்டலப் பிராஹ்மணோபநிஷத் தென்னும் பெயர், கௌஷீதகி பிராஹ்மணோபநிஷத் என்ப தாதி போன்று உண்டாயிற்று.

அவற்றுள், ஐந்து பிராஹ்மணங்க ளிருக்கின்றன. முதற் கண் ராஜயோகத்திற்கு, அஷ்டாங்க அங்கங்களும், லட்சியத்திர யமும் கூறப்பட்டுள்ளன. இரண்டாவதன்கண் அந்தர் லட்சியாதி யின் விஸ்தரமாம்; மூன்றாவதன்கண் அமநஸ்க விஸ்தர மாம்; நான்காவதன்கண் வியோம பஞ்சகமாம்; ஐந்தாவதன்கண் அமநஸ்க பலமாம்; என விஷய விபாகங்களாம்.

இந்த உபநிஷத்தின் அர்த்தத்தை ராஜயோக மென்னும் பாஷ்யம் ஸ்பஷ்டமாகப் பிரதிபாதிக்கின்றது. அவ்விப்பாஷ் யத்தைப் பிரஹ்மசூத்ராதி பாஷ்ய மியற்றிய சங்கராச்சார்ய சுவாமிகளே இயற்றினரெனப் பிரசித்தமாகக் கூறுகின்றனர். அங்ஙனமே, அநேகமாக அப்புத்தகத்தின் அந்திம பாகத்தில் உபசம்ஹார வாக்யமும் பார்க்கப்படுகின்றது. ராஜயோக பாஷ் யத்திலுள்ள பத வாக்யாதிகளின் சைலியைப் பார்க்கும் சிலர் களோ இவ்விடத்து விவாதிக்கின்றனர். சில புத்தகங்களில் சதாநந்த அவதூத ரியற்றிய ராஜயோக பாஷ்யம் சமாப்த மெ ன்று எழுதி யிருப்பதும் பார்க்கப்படுகின்றது.

இந்த ராஜயோக பாஷ்யம் யாதானுமொரு மூலத்தின் பிராமாண்யக் கிரஹணத்தினலும், பதச்சேதாதியாலு மின்றி ஸ்வதந்த்ரமாகவே ராஜயோகத்தை நிரூபிக்கின்றது. ஆயினும், மண்டலப் பிராஹ்மணேபநிஷத்தின் வியாக்யாந பதத்தை யடைதற்கு யோக்ய மன்ரும். இருப்பினும், அர்த்தத்தினல் அதன் அர்த்தத்தைப் போதிக்கும் பரமாயிருத்தலின் அது பாஷ்ய ஸ்தாநத்தை யடைந்த தென்று வியவகரிப்பவர்கள் பாஷ்ய மென்று வியவகரிக்கின்றனர்.

இதன் முதலில் "இங்ஙனம் ஹடயோக லட்சணத்தை விஸ்தரமாக அநுஷ்டித்துப் பிரகிருத சத்குருவைப் பார்த்து இங்ஙனம் கூறினர்" என்றிங்ஙனம் உபக்கிரமமானது பார்க்கப் படுகின்றது. அதனுனும், ஹடயோக பாஷ்யம் இதனேடு சமான கர்த்தாவிற்கே இதன் பூர்வ பாகரூப மாகின்ற தென அநுமிக்கப்படுகின்றது. பின்னேயோ இது பரியந்தம் அது பிரசித்தியாக யாண்டுங் காணப்பட வில்லை.

இதில் வையாசிக தர்சநத்தினின்றும் விலட்சணமான சில அர்த்தங்களும் அறியப்படுகின்றன. எங்ஙனம் இதில் பஞ்ச பூதங்களில் ஒவ்வொரு பூதத்தினின்றும் ஒவ்வொரு அந்தக் கரண, பிராண, ஞானேந்திரிய, அதன் விஷய, கர்மேந்திரியங் கட்கு ஒன்றென்ருேடு கூடி ஐந்துண்டாகின்ற தெனக் கூறி, ஞாதாவாய புருஷனே அந்தக்காரணங்களில் அந்தர்ப்பாவஞ் செய்து, அந்தக்கரணம் ஐந்தெனக் கூறப்பட்டிருக்கின்றது. பஞ்சதசியாதியிலோ சேர்ந்த பஞ்ச பூதங்ளால் அந்தக்கரணங்கள் உண்டாகின்றன. அந்தக்கரணங்களும் நான்கே யென அறியப் படுகின்றது. "சர்வத்தாலும் அந்தக்கரணம்; அதுவிருத்திபேதத் தால் இருவகைத்தாம்; சம்சய ரூபம் மநமாகின்றது ; நிச்சய ரூபம் புத்தியாகின்றது"; "மநம், புத்தி, அகங்காரம், சித்தம், அந்தக்கரணமாம். இவற்றிற்குச் சம்சயமும், நிச்சயமும், கர்வ மும், ஸ்மரணமும் விஷயங்களாம்" என்று பஞ்சதசியில் கூறப் பட்டிருக்கின்றது. இப்பாஷியத்தினுதியில் ராஜயோகத்திற்கு எட்டு அங்கங்கள் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அந்த அங்கங்

களிலும், யம, நியம, பிரத்யாகாரங்கள், சம தமாதி ரூபங்கள், ஆசநப் பிராணுயாமங்கள் ஹடயோகம் போன்றே. தாரண, தியாந, சமாதிகளும் ஹடயோகம் போன்றே. இம் மூன்றினுடைய சொரூப யதார்த்த விஷயத்தன்மை இவ்விடத்து விசேஷமாம். எட்டு அங்கங்களிலும், சொரூப யதார்த்த ஞாந சாஹித்யம் ஹடயோகத்தினின்றும் இவ்விடத்து வைலட்சண்ய மென அறியத்தக்கது.

அதன் பின்னர் வேறு சாஸ்திரங்களின் அப்யாச அபேட்சையால் ராஜயோக பாஷ்யத்திற்கு விஷய ஞாநத்தை ஸ்தாபிக்குந்தன்மையால் அதிசயம் காட்டப்பட்டிருக்கின்றது.

அதன் பின்னர் ஜடாஜட விவேக ஞாநத்தின் பொருட்டு ஆகாசாதி தத்துவ உத்பத்திக் கிரமத்தைத் தரிசிப்பித்து அஷ்டப் பிரகிருதி, ஷோடச விகார, தசேந்திரியாதி ரூபங்களாய சாங்கிய விசேஷ விசிஷ்டத்தால் பிரசித்தமான சில பதார்த்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அதன் பின்னர்ப் பிரகிருதி அதன் விகாரத்தினின்றும் அந்நியத்தன்மையால் ஆத்மாவின் பிரகிருதி புருஷ விவேக மென்னும் வேறு பரியாய முடைய ஞாநத்தைச் சம்பாதித்து லப விதாநக் கிரமத்தால் ஆத்மாவினிடத்து விகாரங்களைச் சேர்க்குமிடத்து அதனுல் மநோ லயத்தினும் ஆத்மாவின் சொரூபத்தில் ஸ்திதி மோட்சமாகின்றது என்னும் கபில சம்பந்த சாங்கியர்களுடைய மதத்தைக் கூறியிருக்கின்றார்.

அதன் பின்னர்ப் பிரகிருதி புருஷ ஈஶ்வரராய மூவர்களினது விவேகத்தால் ஞாநத்தைச் சம்பாதித்து லய விதாநக் கிரமத்தால் பகவானுய சர்வேஶ்வரனிடத்தில் தத்வ லயம் பாவிக்கப்படின், ஆத்மாவின் சொரூபாவஸ்தாநம் மோட்சமாகின்றதென்னும் சாங்கிய ஏகதேசிகளாய சேஶ்வர சாங்கியத்தைக் கூறும் பாதஞ்சலகர்ளுடைய மதத்தைக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் லயகதிக் கிரமம் இங்ஙனம்—அதி சூட்சுமமான ஜீவன் சூட்சும மார்க்க ஆலம்பநத்தால் பூமிக்கு

மேலிருக்கும் ஏழு வாயு ஸ்கந்தங்களை யதிக்கிரமித்து, சூத்ராகாசத்தை யடைந்து, தமோ ரச சத்துவங்களை யதிக்கிரமித்து பகவான் நாராயணனை யடைக. ஆவஹ, பிரவஹ, உத்வஹ, சம்வஹ, சுவஹ, பரிவஹ, பராவஹ என்னும் பெயரையுடைய சப்த வாயு ஸ்கந்தங்களும், புராணங்களிலும், சித்தாந்தசிரோமணியிலும் காட்டப்பட்டிருக்கின்றன.

இதில் மதமிரண்டிலும் சிதத்வைத ஞானுபாவமே தாரக யோக மதத்தினின்றும் விசேஷமாம். இந்தப் பிரகிருத புருஷ பேத ஞானத்தையே நித்தியாநித்திய வஸ்து விவேக சப்தத்தால் தாரக யோகிகள் சிரவண பூர்வ விருத்தமென அங்கீகரிக்கின்றனர்.

அதன் பின்னர்த்தாரக யோக பதார்த்தம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. கேசரியாதி முத்திரைகளால் சச்சிதாநந்த அத்விதீய பிரஹ்மத்தை யறியும் ஹேது ரூபமான புருதகாதி ஆலம்பந சித்தத்தின் ஏகாக்கிரத்தைத் தாரகயோகமென அறிக

அதன் பின்னர் தாரக யோக சித்தியின் உபாய ரூபமான அந்தர் லட்சிய, பஹிர் லட்சிய, மத்திய லட்சிய, பேத பின்னத்தையுடைய லட்சியத் திரயத்தின் அவலோகநம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அவற்றுள் அந்தர்லட்சியம் தேகத்தின் மத்தியில் மூலாதாரத்தினின்று மாரம்பித்து பிரஹ்மரந்திர பரியந்தமாயிருக்கும் சுழுமுனையின் மத்யத்தி லுள்ள குண்டலிநீயாம். பால ஊர்த்துவ பாகத்தில் நிரந்தரம் தேஜசிருக்கின்றது. தர்ஜனியின் நுனியால் மறைக்கப்பட்ட கர்ணரந்தரமிரண்டினுற் கேட்கப்பட்ட கூங்கார சப்தம் சித்தத்தில் ஸ்தாபிக்கப்படின், சட்சுவின் மத்தியிலுள்ள நீல ஜோதி ஹிருதயத்தின் பங்கஜ மத்தியில் விளங்குகின்றது. தேஜசின் சிகையுமாம். அதனத னவலோகநம் தாரக அவலோகந உபாயமாம்.

பஹிர் லட்சியமோ நாசியின் அக்ரபாகத்தில் 4-6-8-10-12 அங்குலங்களால் அளவிடப்பட்ட தேசத்தில் கிரமமாக தாரக யோக ஸ்புரணத்தாற் பார்க்கப்படும் நீலப்பிரகாச ஸ்யாமத்வ ரத்

ஙத்தோடு கூடிய சுக்ல பீத வர்ணத்தோடு கூடிய வியோம தத்துவமும்,புருதகரத்தைப் பார்க்கும் புருஷனுடை திருஷ்டியின் அக்ரபாகத்திலிருக்கும் மயூகங்கள் சிரசின் மீது 12-அங்குலத்திற்குச் சமானமான தேஜசும் உண்டாகின்றன. அதனதன் தரிசநத்தால் தாரக யோக சித்தி அறியத்தக்கது.

மத்திய லட்சியமோ பிராதக்கால சம்பந்த சித்ராதி வர்ண சூரிய மண்டலம் போன்றும், வந்நியின் ஜுவாலைக் கூட்டம் போன்றும், பிரகாசாதி யின்றிய அந்தரிக்ஷம் போன்றும், தாரக யோக காலத்தில் ஆகாசம் பார்க்கப்படும். அவ்வாகாசமும் ஐந்து விதமாம். அப்யாச வசத்தால் பிரகாசாதி விகார மின்றியதாகப் பார்க்கப்படும் ஆகாசம் குணரகித ஆகாசமாம். பிரகாசிக்கப்பட்ட தாரகங்களோடு கூடி யாதொரு காட தமம் போன்று பார்க்கப்படும் ஆகாசம் பரகாசமாம். காலாக்நி போன்று பிரகாசிக்கும் ஆகாசம் மகாகாசமாம். சர்வோத்கிருஷ்ட பிரகாசத்தன்மையால் விளங்கும் ஆகாசம் தத்துவாகாசமாம். கோடி சூரியப் பிரகாசத்தோடு கூடியதால் விளங்கும் ஆகாசம் சூரியாகாசமாம். இங்ஙனம் தாரக யோக காலத்தில் 5-ஆகாசங்களும் பார்க்கப்படுவதால் தாரகயோக சித்தி அறியத்தக்கது

இந்த வியோமத்தின்கண்ணே முதல் குணரகித ஆகாசத்தைவிட்டு, அந்தியத்திலுள்ள நிரதிசயாநந்தப் பரப் பிரஹ்ம லட்சண பரமாகாசத்தை எண்ணிக்கை செய்து வியோம பஞ்சகம் நான்காவது பிராஹ்மணத்தின் மூலத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

அவற்றுள், ராஜயோகம், தாரகம் அமநஸ்கம் என இருவிதமாம். பூர்வ பாகம் தாரகமாம்.உத்தர பாகமோ அமநஸ்கமாம்.தாரகம் மூர்த்தி தாரகம், அமூர்த்தி தாரகம் என இருவிதமாம். அவற்றுள் நேத்ரத்தின் கீழ்ப்பரியந்த பாகத்திலிருக்கும் கணபதியாதி லட்சியத்தை ஆலம்பிக்கும் திருஷ்டி மூர்த்தி தாரகமாம். அமூர்த்தி தாரகம் இரண்டு புருவங்களின்மேல் தகரத்தை யவலம்பிக்கும் உள் திருஷ்டியாம். அமநஸ்கமோ பிராணேந்திரிய லய காரண பூர்வகம் பிரஹ்மாத்ம ஐக்கியத்தில் மநம் லயஞ்

செய்தலாம். அப்பொழுதே நல்ல உன்மநி அவஸ்தை பிராப்தமாகின்றது. ஜீவன் முத்தியும் அதனநந்தரம் உண்டாகின்றதென அறியத்தக்கது.

அதன் பின்னர் இரண்டாவது பிராஹ்மணத்தில் லட்சிய ஆத்மாவின் ஸ்வரூபமும், சாம்பவி முத்திரையும், சண்முகீகரித்தலும், ஜாக்ராதி பஞ்சாவஸ்தைகளும் தரிசிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் சாம்பவியே கேசரி யென்று சிலர் கூறுகின்றனர். சிவ சம்ஹிதையிலோ கேசரியின் லட்சணமே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. "இருபுருவங்களின் மத்தியிலுள்ள திருஷ்டியை திடபுத்தியுள்ளவன் திடமாக ஸ்தாபித்து அநேக உபத்திரவங்களின்றிய வஜ்ராசநத்தி லிருந்து கொண்டு லம்பிகையின் ஊர்த்துவத்திலிருக்கும் கழுத்தில் நாநாதிக்கில் செல்லும் ரசங்களைப் பிரயத்தநத்தால் பண்டிதன் அமிர்தகூபத்தில் நன்கு சேர்க்க. இக்கேசரி முத்திரை பக்தருடைய அநுரோதத்தால் கூறப்பட்டதாம்" என்று கூறப்பட்டிருக்கின்றது, சண்முகீகரணப் பிரகாரமும் அவ்விடத்தே கூறப்பட்டிருக்கின்றது. "இரண்டு அங்குஷ்டங்களால் சுரோத்திரியங்களையும் தர்ஜநிகளால் இரண்டு நேத்திரங்களையும், மத்யம விரல்களால் நாசியின் ரந்திரங்களையும், அநாமங்களால் முகத்தையும் திடமாக யோகியானவன் வாயுவை நிரோதஞ்செய்க. எப்பொழுது இங்ஙனம் நிரந்தரஞ் செய்கின்றான் அப்பொழுது ஜோதிரூப ஆத்மாவைப் பார்க்கின்றான்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

அதன் பின்னர் மூன்றாவது பிராஹ்மணத்தில் அமநஸ்க யோகமானது விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அதன் பின்னர் நான்காவது பிராஹ்மணத்தின் விவரணம் பாஷ்யத்தில் பார்க்கப் படுவதின்று. அது நிச்சயமாக ஆகாச பஞ்சகம் பிரதம பிராஹ்மணத்தில் அநேகமாக நிரூபிக்கப்பட்டிருத்தலா லென அறியப்படுகின்றது. நான்காவது பிராஹ்மணத்தின் முடிவிலும் யோகிகளால் நவசக்ரம், ஷடாதாரம், லட்

சியத் திரய வியோம பஞ்சகங்கள் அவசியம் அறியத்தக்கன எனக் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஒன்பது சக்ரங்கள் சௌபாக்ய லட்சுமி உபநிஷத்தில், ஆதாரசக்ர, ஸ்வாதிஷ்டாந சக்ர, நாபிச்சக்ர, ஹிருதயசக்ர, கண்டசக்ர, தாலுசக்ர, புரூசக்ர, பிரஹ்மரந்திர சக்ர, ஆகாசசக்ரங்களென விவரிக்கப்பட்டிருக்கின்றன. சடாதாரமும், மூலதார, ஸ்வாதிஷ்டாந, மணிபூரக அநாஹத, விசுத்த, ஆஞ்ஞா ரூபங்கள் யோக சூடாமணியாதி உபநிஷத்தில் பிரசித்தங்களாம். லட்சியத் திரயமும், வியோம பஞ்சகமும் பூர்வமே விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன வென அறியத்தக்கது.

அதன் பின்னர் அந்திம பிராஹ்மணத்தில் அமநஸ்க மென்னும் வேறு பரியாய நாம முடைய மனோ லயத்தின் பலம் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

இது மண்டலப் பிராஹ்மணோபநிஷத்தின் ராஜயோக பாஷ்யத்தின் சாராம்சமாம்.

பாயிரம்.

அரியமறை யுட்சார மாகுந் தத்வ
மசியாதி வாக்கியத்தின் பொருளை நன்கு,
உரிமையா வுணர்வதற்கிங் காற்ற லின்றி
யுடலிலக மெனும்புத்தி யுடைய வென்னைச்,
சிறுமையாந் தேகநீ யலவென் றோதித்
தேற்றுவித்த வீரசே கரனின் பாதம்,
அருமையாப் போற்றியே சிந்தை செய்தே
யநுதினமு மறவாது பணிதல் செய்வாம்.

சுக்கிலமா யசுர்வேதந் தன்னி லுள்ள
தூயமண்ட லப்பிரா மணோபநிட தத்துத்,
தக்கதாச் சதாநந்த வவதூத னியற்றித்
தரும்ராஜ யோகபா ஷியமதுட னேதான்,
தக்கதமிழ் மொழியினல வசந மாகச்
சமைத்தனன்கோ விலூரதனில் வீற்றிருக்கும்
மிக்கவிறை வீரசே கரன்றன் பாத
மேவுகா சிநாநந்த னெனும்பெயரான் மாதோ.



ஓம் தத்சத்

பரப்பிரஹ்மணே நம:

சுக்ல யஜுர் வேதத்தி லுள்ள

மண்டலப் பிராஹ்மணோபநிஷத்தும்,

ராஜ யோக பாஷ்யமும்.

முதற் பிராஹ்மணம்.

பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே | பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ||

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:.

ஓம் || யாஜ்ஞவல்க்யோ ஹ வை மஹாமுனிராதித்யலோகம் ஜகாம | தமாதித்யம் நத்வா ஹோ ஹ பகவந்! ஆதித்ய! ஆத்மதத்வமநுப்ரூஹீதி ||

யாஞ்ஞவல்கிய மஹா முனி ஆதித்ய லோகஞ் சென்றார். அந்த ஆதித்யனை நமஸ்கரித்து, ஹே பகவன்! ஹே ஆதித்ய! ஆத்ம தத்வத்தைக் கூறும் என.

இங்ஙனம் ஹடயோக லட்சணத்தை விஸ்தாரமாக அநுஷ்டித்து ப்ராகிருத சற்குருவைப் பார்த்துக் கூறினார்; ராஜ யோகத்தைக் கிருபையாற் கூறும் என.

ஸ ஹோவாச நாராயண: | ஜ்ஞாநயுக்த யமாத்யஷ்டாங்கயோக உச்யதே ||

அந்த நாராயணர் கூறினர். ஞானத்தோடு கூடிய யமாதி அஷ்டாங்க யோகம் கூறப்படுகின்றது.

அவர், விநய வசனத்தையும் குரு பக்தருள் முதன்மையானவனுமான சிஷ்யனைப் பார்த்து “சாவதானமாகக் கேட்பாயக” என்று ஆதரத்தோடு இந்த ராஜயோகத்தைக் கூறுகின்றார். ராஜாவிற்கு உபயோகமான யோகம் ராஜயோகமெனக் கூறப்படுகின்றது; அல்லது யோகங்கட்கெல்லாம் ராஜாவா யிருத்தலின், ராஜயோக மெனக் கூறப்படுகின்றது. முற்புகன்ற யோகங்கள் தேகப் பிரயாசையைச் செய்வன. இதுவோ, பிரயாசை யின்றி மோட்சரூப புருஷார்த்தத்தைக் கொடுப்பது. ஹடயோகம் போன்று இதற்கும் எட்டு அங்கங்களுள. மற்றும், அவ்வங்கங்கள் ஹடயோகத்தில் விஸ்தாரமாக விருக்கின்றன. இதன் சூட்சும அங்கத்தைச் சுருக்கமாகக் கூறுவேன்.

ஶீதோஷ்ணாஹாரநித்ராவிஜய꞉, ஸர்வதா ஶாந்தி꞉, நிஶ்சலத்வம், விஷயேந்த்ரியநிக்ரஹஶ்ச ஏதே யமா꞉ ॥

சீத, உஷ்ண, ஆகார, நித்திரைகளை ஜயித்தலும், சர்வதா சாந்தியும், நிச்சலத்தன்மையும், விஷயத்தின் கண் இந்திரிய நிக்ரகத்தன்மையும் என்னு மிவை யமங்களாம்.

குருபக்தி꞉, ஸத்யமார்கானுரக்தி꞉, ஸுகாகதவஸ்த்வனுபவஶ்ச, தத்வஸ்த்வனுபவேன துஷ்டி꞉, நிஸ்ஸங்கதா, ஏகாந்தவாஸோ மனோநிவ்ருத்தி꞉, பலானபிலாஷோ, வைராக்யபாவஶ்ச நியமா꞉ ॥

குரு பக்தியும், தத்துவமார்க்கப் பிரியமும், சுக சம்பந்த வஸ்து அநுபவமும், அவ் வஸ்து அநுபவத்தால்

சந்தோஷமும், நிஸ்ஸங்கத்தன்மையும், ஏகாந்த வாசத்தால் மனோ நிவிர்த்தியும், பலேச்சை யின்மையும், வைராக்கியத்தன்மையும் நியமங்களாம்.

ஸுகாஸநவ்ருத்தி: சிரவாஸஶ்ச ஆஸந நியமோ பவதி ||

† சுகாசனத் திருத்தலும், நீடித் திருத்தலும் (ஆசனமாம்); இங்ஙனம் ஆசன நியம முண்டாகின்றது.

பூரககும்பகரேசகை: ஷோடஶசதுஷ்ஷஷ்டித்வாத்ரிம்ஶத்ஸங்க்யயா யதாக்ரமம் ப்ராணாயாம: ||

பூரக, கும்பக, ரேசகங்களால் 16-64-32 எண்ணிக்கைகளாற் கிரமமாகப் பிராணயாமஞ் (செய்க).

பிராணயாமமோ ரேசக, பூரக, கும்பகங்களைப் பிரயத்தனமின்றித் தன்வசமான வாயுவால் தன தாதீனத்தைச் செய்து, பிராண வாயுவின் ஸ்திரத்தன்மையைச் சம்பாதிக்க. ஜகத் மித்தை யென்று ஸ்மரிக்க. இவை பிராணயாம மென்று சாங்கிய யோக வித்துக்களாற் கூறப்படுகின்றது.

விஷயேப்ய இந்த்ரியார்த்தேப்யஶ்சேதோநிரோதநம் ப்ரத்யாஹார: ||

இந்திரியத்தின் பிரயோஜனமாய விஷயங்களினின்றும் மனத்தை நிரோதித்தல் பிரத்தியாகாரமாம்.

* தனது அந்தர்முகச் சித்தத்தாற் சைதந்யத்தைப் பரமாத்மாவினிடத்து லயஞ் செய்து நாநாவித விகாரத்தைக் கிரகிக்காத தன்மை பிரத்தியாகார மென்று கூறப்படுகின்றது.

விஷயவ்யாவர்த்தநபூர்வகம் சேதஸி சேதஸ்ஸ்தாபநம் தாரணா பவதி ||

† இஷ்டாசனத்தில் சுகமாயிருத்தல்.

விஷய வியாவர்த்தன பூர்வகம் சைதந்யத்தில் சித்தத்தை ஸ்தாபித்தல் தாரணையாம்.

பாஹ்யாந்தர சம்பந்தமான தத்துவங்களைப் பார்ப்பதிலுள்ள சித்த விருத்தி தாரணை யெனப்படும்.

ஸர்வஶரீரேஷு சைதந்யைகதாநதா த்யாநம் ||

சர்வ சரீரங்களிலும் சைதன்ய ஏகத்தன்மை தியானமாம்.

சோகம் பாவத்தால் சுத்த அத்வைத சுவபாவ சர்வப் பிரகாசம் பரமாத்மாவென அறிந்து சர்வ பூத தயை யுடையவனுகின்ருன். சமான ஆத்மாநுபவத்தால் சர்வத்திலும் சம திருஷ்டி உண்டாகின்றது. நித்திய திருப்தி தியானம் என்பது முனி சம்மதமாம்.

த்யாநவிஸ்ம்ருதிஸ்ஸமாதி: ||

தியானத்தின் விஸ்மிருதி சமாதியாம்.

பரம யோகிகளால், தத்துவ தர்சனத்தாற் சல மின்றிய ஸ்தைரிய சித்தத்தன்மையும், விகல்ப மின்றிய சித்த விருத்தியும், சதா மனே நிர்மலத்தன்மையும், சாந்தியோடு கூடிய தன்மையும் சமாதி என்று கூறப்படுகின்றது.

ஏவம் ஸூக்ஷ்மாங்காநி | ய ஏவம் வேத ஸ முக்திபாக்பவதி ||

இங்ஙனம் சூட்சுமாங்கங்கள். எவன் இங்ஙனம் அறிகின்ருன், அவன் முக்தியடைதற்கு யோக்யனுகின்ருன்.

இந்தப் பிரகாரம் சூட்சும அஷ்டாங்க யோக தற்பானுய்ச் சற்குரு உபதேசத்தால் ராஜ யோகத்தை யறிந்தவன் மோட்சத்தை யடைதற்கு யோக்யனுகின்ருன்.

அற்றேல், சாங்கியாதி அனேக அந்நிய சாஸ்திரங்க ளிருக்கின்றன; அவையும் தத்துவப் பிரதானங்களே; அவற்றின் வாயிலாகப் பிரஹ்மப் பிராப்தி இருக்குக; இத னுபதேசத்தாற் பிரயோஜனமென்னே? யெனக்கூறற்க; சாஸ்திரங்களிற் குசலர்களா யிருக்கின்றவர்கட் குபயோகமான அவை முக்கிய விர்த்தியாற் பிரஹ்மத்தை யுபதேசிப்பன வல்ல. இதுவோ, அஞ்ஞான திருஷ்டியாற் பார்க்கப்படும் பிரஹ்மாண்டத்தைச் சுவீகரித்து, ஹே சிஷ்ய! கேட்பாயாக. இங்ஙனமே, பிண்டாண்ட மென்று விரலாற் காட்டுதல் வாயிலாகத் திருஷ்டாந்தத்தோடு காட்டுகின்றது. அதனுல் விசேஷ ஞானம் சீக்கிரம் உண்டாகின்றது. ஆகவின், சர்வப் பிரயத்தனத்தால் யோகாப்பியாசமே பிரஹ்மப் பிராப்தியின்பொருட்டுச் செய்யத்தக்கது.

அவற்றுள், இவ்வித தத்துவ முண்டாகின்றது:—

ஆத்மாவினின்றும் ஆகாச முண்டாயிற்று; அதனினின்றும் ஞாதாவும் சமானனும் ஶ்ரோத்ரமும் சப்தமும் வாக்குமுண்டாயின. ஆகாசத்தினின்றும் வாயுவும், அதனினின்றும் மனமும், வியானனும், துவக்கும், ஸ்பர்சமும், பாணியும் உண்டாயின. வாயுவினின்றும் அக்னியும், அதனினின்றும் புத்தியும், உதானனும், சட்சுவும், ரூபமும், பாதமு முண்டாயின. அக்னியினின்றும் அப்பும், அதனினின்றும் சித்தமும், பிராணனும், ஜிஹ்வையும், ரசனையும், பாயுவும் உண்டாயின. அப்புவினின்றும் பிருதிவியும், அதனினின்றும் அகங்காரமும், அபான வாயுவும், கிராணேந்திரியமும். கந்தமும், உபஸ்தமும், உண்டாயின. சர்வவிடத்தும் ஆகாசாதி பஞ்ச தத்துவங்களு மிருக்கின்றன. சுரோத்திரம் அத்யாத்மம், சுரோத்திரத்தாற் கேட்கப்படும் வஸ்து அதிபூதம், திக்கு அதிதைவதம். துவக்கு அத்யாத்மம், ஸ்பர்சம் அதிபூதம், வாய்வு அதிதைவதம். சட்சு அத்யாத்மம், பார்க்கத்தக்க வஸ்து அதிபூதம், 'சூரியன் அதிதைவதம். ஜிஹ்வை அத்யாத்மம், ரசம் அதிபூதம், வருணன் அதிதைவதம். கிராணம் அத்யாத்மம், முகரத்தக்க வஸ்து அதிபூதம், அஸ்வினிகள் அதிதைவதம். வாக்கு அத்யாத்மம், கூறத்தகும் வஸ்து அதிபூதம், அக்னி அதிதைவதம். பாணி அத்யாமம், கொடுக்கத்

தக்க வஸ்து அதிபூதம், இந்திரன் அதிதைவதம். பாதம் அத்யாத்மம், செல்லத்தக்க வஸ்து அதிபூதம், விஷ்ணு அதிதைவதம். பாயு அத்யாத்மம், விடுதல் அதிபூதம், மிருத்யு அதிதைவதம். குஹ்யம் அத்யாத்மம், ஆனந்தம் அதிபூதம், பிரஹ்மா அதிதைவதம்.

ஞாதா, மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என அந்தக் கரணங்கள் ஐந்து. ஞாதா புருஷன்; சம்சய ரூபம் மனம்; நிச்சய ரூபம் புத்தி; நல்ல விசார ரூபம் சித்தம்; நான் என்னும் அபிமான ரூபம் அகங்காரமாம். மனம் அத்யாத்மம், மநநஞ்செய்தல் அதிபூதம், சந்திரன் அதிதைவதம். புத்தி அத்யாத்மம், நிச்சயித்தல் அதிபூதம், பிருகஸ்பதி அதிதைவதம். சித்தம் அத்யாத்மம், சிந்தித்தல் அதிபூதம், க்ஷேத்ரஞ்ஞன் அதிதைவதம். அகங்காரம் அத்யாத்மம், அகங்கரித்தல் அதிபூதம், ருத்ரன் அதிதைவதமாம்.

இங்ஙனம் சர்வத்தையும் அறிதலானே அவற்றின் அதீதம் பிரஹ்மம் என்று ஞாந முண்டாகின்றது. எங்ஙனம்? நான் ஆகாசாதி பூத குணங்களோடு கூடியவனு மன்று. அவற்றினின் றுண்டாய இந்திரியங்களு மன்று. நான் அந்தக்கரணமு மன்று. நான் பிராணாதி வாயுக்களு மல்ல. நான் வருணாசிரம ஆசாரத்தை யுடையவனு மல்ல. நான் தர்மாதர்மங்களைச் செய்பவனு மல்ல. நா னிப் பிரபஞ்சமு மல்ல. பின்னையோ, நான் உபமான மின்றிய சத்திய ஞானனந்த லட்சணத்தால் லட்சிக்கப்படும் பரமாத்மாவே யென்று சிந்தித்துப் பரப்பிரஹ்மமாகுக; "சத்தியம் ஞானம் அனந்தம் பிரஹ்மம்" என்னும் சுருதியாலும், மற்றும், "அணுவிற் கணுவும் நானே; அப்படி மகத்தும் நானே; விசித்திர ஜகத்தும் நானே; பழையோனும் நானே; புருஷன் நான்; ஈசுவரன் நான்; இரண்ணியமயன் நான்; சிவரூபம் நானா யிருக்கின்றேன். பாணி பாத மின்றியவன் நான்; சிந்திக்கக் கூடாத சக்தி யுடையவன் நான்; சட்சுவின்றிப் பார்க்கின்றேன்; கர்ண மின்றிக் கேட்கின்றேன்;

நாஞவித ரூபமா யிருந்து நான் அறிகின்றேன். என்னையறிபவ னின்று; சதா நான் சித்ரூபன்; அனேக வேதங்களால் அறி யப்படுபவன் நானே. வேதாந்தங்களைச் செய்த வேத வித்து நானே. எனக்குப் புண்ணிய பாப மின்று; நாச மின்று; ஜன்ம மின்று; தேகேந்திரிய புத்தி யன்று; பிருதிவியு மன்று; அப்பு மன்று; அக்னியு மன்று; வாயவு மன்று; அம்பரமு மன்று. இங்ஙனம் குகையிலிருப்பதாயும், நிஷ்களமாயும், அத் விதீயமாயும், சமஸ்த சாட்சியாயும், சதசத் தின்றிய தாயும், சுத்தமாயு முள்ள பரமாத்மரூபத்தை யறிந்து அடை கின்றான்" என்னும் சுருதியாலும், முன் பிரஹ்ம பின்னன் நான் என்னும் பிரகிருதி வாசனையால் அமிழ்த்தப்பட்ட மித்தி யா ஞானத்தையுடைய நானே, இப்பொழுது பிரஹ்மமா யிருக் கின்றேன் என்னும் ஞானி முக்தனுகின்றான். புகலப்படும் விகாராதிகளும் நா னன்று என விட்டு சத்திய ஞானி ஆகுக.

சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்காதி ஐந்து கர்மேந்திரியங்களும், சப்தாதி ஐந்து விஷயங்களும் மன மும், ஆகிய பதினாறும் விகாரங்க ளென்று கூறப்படுகின் றன. ஐந்து பிராணவாயு ஞானேந்திரிய கர்மேந்திரிய மனோ புத்திரூபம் லிங்க சரீர மென்று கூறப்படுகின்றது பஞ்ச மகா பூத ஞானேந்திரிய கர்மேந்திரிய மனோ புத்திரூபம் சிலர் லிங்க மென்று கூறுகின்றனர். கர்த்ரு, ஞாத்ரு, போக்த்ராதிகள் நவ பதார்த்தங்கள். பஞ்ச மகாபூதங்களும், பிரகிருதியும், அகங்கார மும், மகத் தத்துவமும் அஷ்டப் பிரகிருதிகளாம். பிரஹ்ம, விஷ்ணு, ருத்ரரென மும்மூர்த்திகள். இச்சை, ஞானம், கிரியை யென மூன்று சக்திகள். விசுவன், தைசசன், பிராக்ஞன் என மூன்று ஜீவர்கள். பிராதக்கால, மத்தியாஹ்ன, அஸ்த பேதத் தால் மூன்று காலங்கள். காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷி ணுக்நி பேதத்தால் மூன்று அக்நிகள். சுவர்க்க, மத்திய, பாதல பேதத்தால் மூன்று லோகங்கள். ஜாக்ர சொப்பன சுழுப்தி பேதத்தால் மூன்று அவஸ்தைகள். ஸ்தூல, சூட்சும, காரண

பேதத்தால் மூன்று தேகங்கள். † கார்மிகம், மாயிகம், ஆணவிகம் என மும் மலங்கள். ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என முத்தாபங்கள். தனமும், தாரமும், புத்ராதிகளும் மூவேடணைகள். சத்துவ, ரஜஸ், தம பேதத்தால் முக்குணங்கள். இவ் வெல்லாவற்றையும் மாயா கல்பிதமென அறிந்து, அவற்றினின்றும், விலட்சணன் நான் என்னும் நிச்சய புத்தியைச் செய். அதன் பின்னர் இவ்வுபதேசத்தைக் கேட்பாயாக.

ஆகாசாதி பூதகுணங்களை நன்கு அறிந்து ஸ்தூலத்திற்கு சூட்சுமத்தில் அந்தர்த்தான விதி கூறப்படுகின்றது.—

பூமியில் கிராணத்தையும், ஜலத்தில் ஜிஹ்வையையும், அக்னியில் திருஷ்டியையும், வாயுவில் த்வக்கையும், ஆசாயத்தில் ஸ்ரோத்திரத்தையும், கிரமமாக யே கி சேர்க்குக.

இங்ஙனம் சாவதானத்தாற் பூதேந்திரிய ஐக்கியத்தைச் (செய்க). அஃதெங்ஙனம்?

பூமியை ஜலத்தில், ஜலத்தை வந்நியில், ஹோமம் பண்ணிய நெய் போன்று சிந்தித்து, வந்நியை வாயுவில், வாயுவை ஆகாயத்தில், ஆகாசத்தைக் கிரமமாகச் சித்தத்தில், சித்தத்தை அகங்காரத்தில், அடைந்த கிரமமாக அறிந்து, அகங்காரத்தைப் புத்தி மத்தியில் லயஞ் செய்து, கூடமான மதியை மித தர்சனமத்தியில், அத்தர்சனத்தைப் பரமாத்மாவினிடத்தில், நல்ல யோகியானவன் முற் புகன்ற ரீதியால் பரமாத்வின் கண் சேர்க்க. இங்ஙனஞ் செய்யில், பஞ்சீகரணம் உண்டாகின்றதென்று பரமயோகிகள் கூறுகின்றனர்.

இதற்கு இந்திரியாத்மாவென்றும், கேவலாத்மாவென்றும் இருவிதம் அங்கீகரிக்க. புத்தியால் பரமாத்ம சொரூப சச்சிதானந்த லட்சணம் அறியப்படுகின்றது. அதன் தர்சனத்தால் புத்தி சங்கோசித்தலின், ஆத்மைக்யம் உண்டாகின்றதென்று நன்கு புகலப்பட்டது.

---

† கர்மத்திற் சஞ்சரிக்கும் இந்திரியங்கட்குக் கார்மிகமென்று கூறப்படும்.

𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚 𑌦𑍋𑌷𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌭𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌵𑌾𑌸𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌃 । 𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑌾𑌸𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌘𑍍𑌵𑌾𑌹𑌾𑌰𑌾𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌤𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 ॥

தேகத்திற்குக் காமம், குரோதம், பயம், நிஶ்வாசம், நித்திரை என ஐந்து தோஷங்களுண்டாகின்றன. அவற்றின் நிவிர்த்தி நிஸ்ஸங்கல்பம், க்ஷமை, மிதாகாரம், பிரமாத மின்மை, தத்துவ சேவனம் என்பவற்றாலுண்டாம்.

இங்ஙனம் சாங்கிய மோட்ச லட்சணம் பிரபாதிக்கப்பட்டது. இப்பொழுது சாங்கிய ஏகதேசி மதம் கூறப்படுகின்றது; தேகத்திற்குக் காமம், குரோதம், நிஶ்வாசம், பயம், நித்திரை என்னும் பேதத்தால் ஐந்து தோஷங்களிருக்கின்றன. அவற்றின் பரிகார மார்க்கமோ, கிரமமாக காமம் ஸங்கல்ப மின்றியதாலும், குரோதம் க்ஷமையினாலும், நிஶ்வாசம் மித போஜனத்தினாலும், பயம் மயக்க மின்மையினாலும், நித்திரை சத்துவ சேவனத்தினாலும் உண்டாகின்றன.

𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌯𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌂 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿𑌤𑌰𑌙𑍍𑌗𑌂 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌦𑌾𑌰𑌪𑌙𑍍𑌕𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌾𑌰𑍍𑌧𑌿𑌂 𑌤𑌰𑍍𑌤𑍁𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌵𑌲𑌮𑍍𑌬𑍍𑌯 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 ॥

நித்திரையும், பயமுமாகிய சர்ப்பத்தையும், ஹிம்சாதி தரங்கத்தையும், ஆசையாகிய சுழலையும், தாரமாகிய சேற்றையுமுடைய சம்சாரமாகிய வார்த்தியை (சமுத்திரத்தை)க் கடத்தற்குச் சூட்சும மார்க்கத்தை அவலம்பித்துச் சத்துவாதி குணங்களை அதிக்கிரமித்துத் (தாரகத்தைப் பார்க்க).

துக்கமாகிய ஜலத்தையும், வியாதி மிருத்யுவாகிய முதலை யையும், பயமாகிய சர்ப்பத்தையும், ஹிம்சாதியாகிய தரங்கத்தை யும், ஆசையாகிய சுழலையும், மனைவியாகிய சேற்றையும், நாநா கல்பித சுகமாகிய ரத்நத்தையு முடைய சுவ சம்பந்தமான வஸ்துவோடு ஐக்கியமாய், சத்தியத்தை அதிக்கிரமித் திருக்கும் சம்சாரமாகிய சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு இஃதுபாயமாம். சுவயம் அதி சூட்சுமனான ஜீவன் சூட்சும மார்க்கத்தை அவலம் பித்துச் சப்த பவனங்களையுந் தாண்டிப் பிரத்யக் ரூபமாயிருந்து சிரேஷ்டமான ஆகாய கதியை யடைந்து, அவ்வாகாசத்தைத் தமசில் ஸ்தாபிக்க; தமத்தையும் ரஜசில் லீனஞ் செய்து, ரஜசை யும் சத்துவத்திற் பிரவேசஞ் செய்க; சத்துவத்தையும் நாராய ணனிடத்து லயஞ் செய்க; ஸ்ரீமன் நாராயணனுடைய பரம்பதத்தை யடைக. அப்பொழுது நித்தியாநந்த சுகம் அனுபவிக்கப்படுகின் றது. ஞானத்தாலேயே மோட்ச முண்டா மென்னும் புத்தி யாகிய எதனால் ஆத்மா அறியப்படுகின்றதோ, அது சாங்கிய மாம். அதுவே சம்யக்ஞானமாம். இங்ஙனம் மோட்ச லக்ஷணம் கூறப்படுகின்றது.

தாரகஉவமொலாகயெகூ | ஹுமூஉயெ௱ ஸவ்வி
ஊா நகூமெதஜஃகூடுாாமிவம் தாரகம் ஸ்ஹு |
தடுாவாயம் முக்ஷு௱ துயாவமொகூநடு ||

தாரகத்தைப் பார்க்க. புரூமத்தியி லிருக்கும் சச் சிதாநந்த தேஜசை யுடைய கூடரூப தாரகம் பிரஹ்ம மாம். அத னுபாயம் லட்சியத் திரயத்தைப்பார்த்தலாம்.

இங்ஙனம் புகன்ற சாங்கியத்தினின்றும் தாரகம் சிரேஷ்ட மென்று தாரக யோகிகள் அங்கீகரிக்கின்றனர். ஹே பிராகிர்த! அதன் லட்சணம் அதி விசித்திரம். நீ சாவதான மனத்தை யுடையவனுப்க் கேட்பாயாக. இது மிகவும் ரகஸ்யமாயினும், இதனை உனது பக்தியால் சந்தோஷத்தை யடைந்த நான் கூறு கின்றேன். அற்ப புத்தியை யுடைய புருஷர்கள் மந்தர லய ஹட யோகமாகிய ஆரண்யத்தில் நீண்ட காலம் சஞ்சரிக்கின்றனர்.

அவற்றை நன்கு தியாகஞ்செய்து குருமுகத்தால் தாரகத்தை யப்பியசிப்பரேயாயின், அப்பொழுது சித்தராகின்றனர். ஆகலின் தாரக யோகத்தை யிங்ஙனம் அப்யாசஞ் செய்க.

நன்கு மூடிக்கொண்ட நேத்திரத்துடனுவது, சிறிது திறந்த நேத்திரத்துடனுவது, உள் நேத்திரத்தால் புருவத்தின் மேல் சச்சிதாநந்த தேஜசுடைய கூடரூபப் பரப்பிரஹ்மத்தைப் பார்ச்க. தாரகாக்ர விர்த்தியால் லட்சியத்தை ஆகாசத்தில் குருமுகமா யடைந்திருப்பனேயாயின், அப்பொழுது தாரகயோகஞ் சித்திக்கின்றது. அதனை அப்யசிக்கின்றவர்கள் தாரக யோக சித்தர்க ளாகின்றனர். பிராணுயாமாதி அனுஷ்டானப் பிரயாசமின்மையால் தாரக யோகமே உத்தம மென்று பரமயோகிகள் கூறுகின்றனர். மற்றும்—லட்சியத்திரயம் தாரக யோகிகளா லறியப்படுகின்றது. ஆகலின் குருவாக்கியத்திற் சிரத்தை யுடைய நீயும் தாரகத்தை அப்யாசஞ் செய். அப்யாசஞ் செய்யும் புருஷனைக் கடக்கச் செய்தலின் தாரமாம். தாரமே தாரக மெனப் படும்; தன தர்த்தத்தில் கப்பிரத்தியயம் விதிக்கப்படுதலின். தாரகமாகிய யோகம் தாரகயோகம் என்பது பொருளாம். "யுஜிர் யோகே" என்னும் தாதுவினின்று முண்டாய் ஜீவேஸ்வரர்களினது பேதத்தைச் செய்யும் அஞ்ஞானத்தைப் பரித்தியாகஞ் செய்து ஐக்கியத்தைச் செய்தலின் யோக மெனப்படும்.

பிரஹ்மத்திற்கு ஜீவத்தன்மை அவித்தியா உபாதிகம்; பிம்பப் பிரதிபிம்ப முக பேதத்தைச் செய்யும் தர்ப்பணம் போன்று. ஆகாச பேதத்தில் கடாதிகள் போன்று; சூரிய பேதத்தில் ஜல பாத்திரம் போன்று; சற்குரு உபதேசத்தால் ஞானக்கினியால் அஞ்ஞான உபாதி நஷ்டமாயின், பிரஹ்மம் ஒன்றே அத்விதீயம், கேவலம் எஞ்சுகின்றது.

"எப்பொழுது இருள் அன்று அது தினமு மன்று, இரவு மன்று, சத்து மன்று, அசத்து மன்று, கேவலம் சிவனே அது அக்ஷரம், அது சூரியன், சிரேஷ்டம், பிரஞ்ஞை, அதனல் முன்னரே விஸ்தாரமாயிருக்கின்றது." என்னுஞ் சுருதியானும்,

நிலை யில்லாத சரீரங்களில் மகத்தாயும், விபுவாயு மிருக்கும் அச ரீரமான ஆத்மாவை யறிந்து தீரன் சோகத்தை யடையான்'' என்னும் சுருதியாலும். இதனால் தாரகத்தா லறியப்படுவது பரமாத்மா வென்பது பலிதார்த்தமாம்.

𑌮𑍂𑌲𑌾𑌧𑌾𑌰𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑍁𑌷𑍁𑌮𑍍𑌨𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌭𑌾। 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌡𑌿𑌤𑍍𑌕𑍋𑌟𑌿𑌸𑌮𑌾 𑌮𑍃𑌣𑌾𑌲𑌤𑌨𑍍𑌤𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌨𑍀। 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌮𑍋𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃। 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃। 𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌿𑌤𑌕𑌰𑍍𑌣𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑍇 𑌫𑍂𑌤𑍍𑌕𑌾𑌰𑌶𑌬𑍍𑌦𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇। 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌮𑌨𑌸𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌨𑍀𑌲𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇𑌽𑌪𑌿 ॥

மூலாதாரத்தினின்று மாரம்பித்துப் பிரஹ்ம ரந்திர பரியந்தம் சுழுமுனை சூரியப் பிரபையாம். அதன் மத்தியில், தடித்கோடி சமானமான மிருணாளதந்து சூட்சுமமான குண்டலினியாம். அவ்விடத்துத் தமத்தின் நிவர்த்தியாம். அதன் தர்சனத்தால் சர்வ பாப நிவிர்த்தியாம். தர்ஜன்யத்தின் நுனியால் மூடப்பட்ட கர்ண ரந்தர மிரண்டில் பூத்கார சப்த முண்டாகின்றது. அவ்விடத்து ஸ்திதமான மனதில் சட்சுவின் மத்தியிலுள்ள நீலஜோதி பார்க்கப்படுகின்றது. இங்ஙனம் ஹிர்தயத்தின்கண்ணும்.

இந்த மூன்று லட்சணங்களவை யென் றிவ்விடத்துக் கூறப்படுகின்றது:—தேக மத்தியில் பிரஹ்ம நாடியாய சுழுமுனை சூரிய ரூபமாய்ப் பூரணச்சந்திர ப்ரகாசமா யிருக்கின்றது அதுவும் மூலாதாரத்தினின்று மாரம்பித்துப் பிரஹ்ம ரந்தர பரியந்தம் செல்லுகின்றது. அதன் மத்தியில் தடித் கோடி சமான காந்தியால், மிர்ணாள சூத்திரம் போன்று சூட்சும அங்கத்தை

யுடைய குண்டலினி பிரசித்தமா யிருக்கின்றது. அதனைப் பார்த்து, மனத்தானேயே புருஷன் சர்வ பாப பந்த விநாசனாயி லாய் முக்தனாகின்றான். பால, ஊர்த்வக, லலாட, சசிமண்டலத்தில் நிரந்தரம் தேஜஸைத் தாரக யோக விஸ்புரணத்தால் பார்க்கிற் சித்தனாகின்றான். தர்ஜனியின் நுனியால் மறைக்கப்பட்ட கர்ண ரந்தரங்களில் பூத்கார சப்த முண்டாகின்றது. அவ்விடத்து ஸ்திதமான மனத்தில் சட்சுவின் மத்தியி லுள்ள நீலஜோதி ஸ்தலத்தைப் பார்த்து, அந்தர் திருஷ்டியால் சமான ரகிதமான சுகத்தை யடைகின்றான். இங்ஙனம் ஹிருதய தாமரையின் மத்தியில் விளங்கும் தேஜஸின் சிகா தர்சனத்தாலும் பரமயோகியால் கற்பிக்கப்பட்ட அந்தர் லட்சிய லட்சணம் அறியத்தக்கது. சர்வமும் முமுட்சுக்களால் உபாசித்தற்கும் யோக்யமே.

𑌬𑌹𑌿𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌸𑌾𑌗𑍍𑌰𑍇 𑌚𑌤𑍁𑌃𑌷𑌡𑌷𑍍𑌟𑌦𑌶 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌭𑌿𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌨𑍀𑌲𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌶𑍍𑌯𑌾𑌮𑌤𑍍𑌵𑌸𑌦𑍃𑌗𑍍𑌰𑌕𑍍𑌤𑌭𑌙𑍍𑌗𑍀𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌦𑍍𑌵𑌯𑍋𑌪𑍇𑌤𑌂 𑌵𑍍𑌯𑍋𑌮𑌤𑍍𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿। 𑌸 𑌤𑍁 𑌯𑍋𑌗𑍀। 𑌚𑌲𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑍋𑌮𑌭𑌾𑌗𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑍂𑌖𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇। 𑌤𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾 𑌭𑌵𑌤𑌿। 𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌪𑌰𑌿 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌨𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌤𑌦𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿 ॥

பகிர் லட்சியமோ, நாசாக்ரத்தில் 4-6-8-10-12 அங்குலங்களால் கிரமமாக நீலப்பிரகாச, ஸ்யாமத்வ சமான ரத்தத்தோடு கூடி விளங்கி சுக்ல பீத வர்ண மிரண்டோடுகூடிய வியோம தத்துவத்தைப் பார்க்கின்றான். அவன் யோகி. சல திருஷ்டியால் வியோம பாகத்தைப் பார்க்கும் புருஷனுக்கோ திருஷ்டியின்

நுனியில் ஜோதிரூப மயூகங்க ளிருக்கின்றன. அதனால் திருஷ்டி ஸ்திரமாகின்றது. சிரசின்மீது துவாதச அங்குல சமான ஜோதி பார்க்கப்படுகின்றது. அப்பொழுது அமிர்தத்தன்மையை யடைகின்றான்.

பஹிர் லட்சியமோ, நாசிகாக்ரத்தில் 4—6—8—10—12 அங்குலங்களால் உள்ளே கிரமமாக நீலப் பிரகாச ஶ்யாமத்வ சமான ரக்தத்தோடு கூடி விளங்கும் சுக்கில பீதவர்ண வியோம தத்துவத்தை எவன் பார்க்கின்றான், அவன் யோகியாகின்றான். சல திருஷ்டியால் வியோம பாகத்தைப் பார்க்கும் புருஷனுக்குச் சமீபத்தின்கண்ணும், அல்லது நேத்திரத்தின் முன்னரும் ஜோதிரூப மயூகங்க ளிருக்கின்றன. அதன் தரிசனத்தால் யோகியாகின்றான். தபிக்கப்பட்ட சுவர்ண சமான ஜோதிரூப மயூகங்களை அப்புவி னங்கத்தின் முடிவின்கண்ணும், அல்லது பூமியின் கண்ணும் பார்க்கின்றான். அதனால் திருஷ்டி ஸ்திரமாகின்றது. சிரசின் மீது பன்னிரண் டங்குல முயர்ந்த பாகத்தில், அல்லது பிரதேச மாத்திரத்தில் ஜோதிக் கூட்டமானது பார்க்கப்படின், அதனைப் பார்ப்பவன் அமிர்தத் தன்மையை யடைகின்றான். யாதானு மோரிடத் திருப்பவனாலும், சிரசில் ஆகாசம் ஜோதி ஸ்வரூபத்தால் பார்க்கப்படுமாயின், அவன் யோகியாகின்றான். இங்ஙனம் பாகிய லட்சிய லட்சணங் கூறப்பட்டது.

அத மத்யலக்ஷ்யம் ப்ராதஶ்சித்ராதிவர்ணஸூர்ய
சந்த்ரவஹ்நிஜ்வாலாவலீவத் தத்விஹீநாந்தரி
க்ஷவத்பஶ்யதி ததாகாராகாரீ பவதி ॥

மத்திய லட்சியமோ, தன்னுள் சித்திராதி வர்ண சூரிய சந்திர வஹ்நி ஜுவாலைக் கூட்டம் போன்று அஃதின்றிய அந்தரிக்ஷம் போல் பார்க்கின், (அப்பொழுது) ததாகாரத்தை யுடைய ஆகாரியாகின்றான்.

இப்பொழுது மத்திய லட்சிய லட்சணங் கூறப்படுகின்றது. தன்னுள் சித்திராதி வர்ண அகண்ட சூரிய சந்திராதி போன்று வன்னிஜ்வாலையின் கூட்டம் போன்று, அதீந்திரிய அந்தரிக்ஷம் போன்று; பார்க்கின், அப்பொழுது ஆத்மா அவ்வாகாரமுடைய ஆகாரியாயிருக்கின்றது. அது மத்திய லட்சிய லட்சணமாம்.

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌂 𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌤𑌾𑌰𑌕𑌾𑌕𑌾𑌰𑌗𑌾𑌢𑌤𑌮𑍋𑌪𑌮𑌂 𑌪𑌰𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌕𑌾𑌲𑌾𑌨𑌲𑌸𑌮𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌂 𑌮𑌹𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑌰𑌮𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌏𑌵𑌮𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥

அப்பியாசத்தால் நிர்விகாரமான குண ரகித ஆகாசமாகின்றது. பிரகாசிக்கப்பட்ட தாரகரூப காடதம சமானமான பராகாச மாகின்றது. காலாக்கினி சமானப் பிரகாச முடைய மகாகாசமாகின்றது. சர்வோத்கிருஷ்ட பரமப்பிரகாசப் பிரகாச சமானமான தத்துவாகாசமாகின்றது. கோடி சூரியப் பிரகாசமான சூரியாகாசமாகின்றது. இங்ஙனம் அப்பசிப்பதால் தன்மயமாகின்றது. எவன் இங்ஙன மறிகின்றான்.

மீண்டு மீண்டும் நிர்விகாரமாயின், அவ்விது குணாகித ஆகாசமாகின்றது. பிரகாசிக்கப்பட்ட தாரக ரூபத்தால் நன்கு பிரகாசிக்கப்பட்ட காடதம சமான பராகாச மாகின்றது. காலாக்னி சமானப் பிரகாச மகாகாசமாகின்றது. சர்வோத்கிருஷ்ட பரமப் பிரகாசப் பிரகாச சமான தத்துவாகாச மாகின்றது. கோடி சூரியப்பிரகாச வைபவசமான சூரியாகாசமாகின்றது. இங்ஙனம் பாஹ்யாந்தரத்தி லுள்ள வியோம பஞ்சகமாகிய தார

கம் லட்சிக்கப்படின், அவன் யோகியாயும், முத்தி பலத்தை யுடையவனுயும், அவ்வித வியோம சமானமு மாகின்ருன். ஆதலின் தாரகமே, லட்சிய ஸ்தானமும், அமனஸ்க பலத்தைக் கொடுப்பதுமாம்

𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌵𑌿𑌭𑌾𑌗𑌤𑌃 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌮𑌨𑌸𑍍𑌕𑌂 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌿𑌤𑌿 । 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌰𑌕𑌮𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌰𑌕𑌮𑌿𑌤𑌿 ॥

அந்த யோகத்தையும், பூர்வோத்ர விபாகத்தால் இரண்டு பிரகாரமாக அறிக. பூர்வமோ தாரக மென அறிக. அதன் உத்தரமோ அமனஸ்க மென அறிக. மூர்த்தி தாரகம், அமூர்த்தி தாரகம் எனத் தாரகம் இருவிதமாம்.

அமனஸ்கம் யாது? தாரகமே பிற்பாதியால் அமனஸ்க மாகின்றது; முற்பாதியால் தாரகமேயாம். பிற்பாதியால் அமனஸ்க ராஜயோக மெனக் கூறப்படுகின்றது. அது யோக சாஸ்திரத்தில் "அந்த யோகமும் பூர்வோத்ர விபாகத்தால் இருவிதமா யறிக. பூர்வம் தாரகம்; உத்தரம் அமனஸ்க மென்று மறிக" என்றும், "அமனஸ்கம் ராஜ யோகம் என்று பிரஹ்ம வாதிகள் கூறுகின்றனர்" என்றும் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு இது பொருளாம்.—தாரக, அமனஸ்க பேதத்தால் ராஜயோகம் இரண்டு விதமாம். தாரகம், பூர்வ பாகம், உத்தர பாகம் அமனஸ்கம். தாரக ஸப்த சுவாரஸ்யத்தால் இருபுருவங்களின் மத்தியப் பிரதேசத்தில் லயமடையுங் கிரமத்தால், வாம தட்சண நேத்திர ரூப சந்திர சூரிய கதிக்குத் தாரகம் ஆஸ்ரயமாகலின்; இப்பொழுது அஸ்வினி நட்சத்ர பிரதம பாத சூர்யனிடத்து என்பதாதி தாரா ஆதீன கிரக சம்பந்தத்திற்கு ஜோதிஸ் சாஸ்திரப் பிரசித்தியான். இவ்விடத்தும் தாரகமாகிய நேத்திரங்களில் சந்திர சூரியப் பிரதிபலனத்தால்

அவை அவையேயென ஊகிக்கத்தக்கன. ஆகவின், தாரகங்களால் சூரிய சந்திர மண்டல் தரிசனஞ் செய்யத்தக்க தெனப் பிராப்த மாகுங்கால் பிரஹ்மாண்டமாகிய ஆகாசத்தின் மத்தியில் சூரிய சந்திரமண்டலம் இரண்டு போன்று பிண்டாண்டமாய சிரசின் மத்தியி லுள்ள ஆகாசத்தில் சூரிய சந்திர மண்டல மிரண்டு மிருக்கின்றன வென்னும் நிச்சயத்தால் தாரகங்க ளால் அத்தரிசனம் இவ்விடத்தும் செய்யத்தக்கது; அவ்விரண் டின் ஐக்கிய திருஷ்டியால் பிராப்தம். அவ்விடத்து மனதும் காரண மெனக் கூறவேண்டும்; அதன் சம்பந்த மில்லையாயின், இந்திரியப் பிரவிர்த்திக்கு அவகாச மின்மையின். இதனால் மனம் தாரக ஐக்கிய விர்த்தியால் பார்க்கத்தக்கது என்றும், லட் சியம் ஆந்தர மெனச் செய்து உட் திருஷ்டிப் பிரர்தான்யத்தால் தாரகத்தானேயே அதன் வேத்தியத்தன்மை யுண்டாகின்றது. இதனனே அது தாரக மெனக் கூறப்படுகின்றது. அதுவும் மூர்த்தி தாரகம், அமூர்த்தி தாரகம் என இரண்டு விதமாம்.

யதிந்த்ரியாந்தம் தந்மூர்த்தி தாரகம் | யத் ப்ரூயுகாதீதம் தத³மூர்த்தி தாரகமிதி | உப⁴யமபி மநோயுக்தமப்⁴யஸேத் ||

எது இந்திரியாந்தம் அது மூர்த்தி தாரகம். எது புருவங்களின் சம்பந்தத்தை அதிக்கிரமித் திருக்கின் றதோ அஃது அமூர்த்தி தாரகமாம். இரண்டையும் மனத்தோடு கூடி அப்பியாசிக்க.

இது கூறப்பட்டதாகின்றது.—எது இந்திரியத்தின் முடி வோ, அது மூர்த்தி யுடையது. எது இருபுருவங்களை யதிக்ரமித் திருக்கின்றது அது அமூர்த்தி யுடையது. அற்றேல். இங்ஙனம் கூறவேண்டும்.—நேத்திரத்தின் கீழ் கணபதியாதியரை அது அறியாமையின், அதனினின்று ஊர்த்துவம் தகர மார்க்கத்தால் நாளப் பிரதேசத்தை யவலம்பித்து நன்கு மேற் செல்லுதலால் அதன்மே லிருக்கும் விசேஷ தரிசன மென. அவ்விடத்துக் கூறப்படுகின்றது —சர்வவிடத்தும் ஆந்தர பதார்த்த விசாரத்தில்

மனமே காரணம். மனத்தோடு கூடிய தாரகங்களானே அதன் மேலிருக்கும் தத்துவம் அறியப்படுதலின், மனதோடு கூடிய உட்பார்வையானே சச்சிதானந்த சொரூபம் பரப்பிரஹ்மமென அறியப்படுகின்றது. பிரஹ்மத்திற்கு என்ன லட்சணமெனும் சம்சயத்தில் ' எது சுக்லம் அது பிரஹ்மம்" என்னும் உபநிஷத்தால் சுக்ல தேஜோமயம் பிரஹ்மமெனப் பிராப்தர். சுக்கிலாதிவர்ணங்கட்கு மாயாமயத்தால் அதன் அதீதம் பிரஹ்மமெனக் கூறவேண்டுமெனின், அற்றன்று; சுக்லவர்ணம் பிரஹ்மம் என்னுமிவ்விடத்து விசேஷமாக அங்கீகரித்தலின். "அவ்விடத்து சூரியன் பிரகாசிப்பதின்று; சந்த்ர தாரகங்களு மன்று. இந்த மின்னல்கள் விளங்குவன வல. இந்த அக்னி எங்ஙனம் விளங்குகின்றது? பிரகாச ரூபமான அதை (ஆஸ்ரயித்து) சர்வமும் பின்னல் விளங்குகின்றன. அதன் பிரகாசத்தால் இச்சர்வமும் விளங்குகின்றது" என்னும் சுருதியால், கேவலம் சுக்லரூபம் ஜலத்திற்கு; செம்மை உருவம் அக்னிக்கு; கிருஷ்ணரூபம் அந்நத்திற்கு என்பது நியமம். "எது அக்னியின் செம்மை உருவம், அது தேஜசின் ரூபம்; எது ஜலத்தின் சுக்ல ரூபம், அது தேஜசின் ரூபம்; எது அன்னத்தின் கிருஷ்ண ரூபம் அது தேஜசின் ரூபம்" என்னும் சுருதியால். இதனல் சுக்ல தேஜோமயம் பிரஹ்மம் என்பது சித்தாந்தமாம். அந்தப் பிரஹ்மம் மந சககாரியோடு கூடிய சட்சுவாய அந்தர் திருஷ்டியால் வேத்தியம் என்பது பலிதார்த்தம். இது அமூர்த்தி தாரக லட்சணமாம்.

உத்தரா து அமனஸ்க தாரகம் ... ஸகாஸாய ப
வதி। ... தேஜஸ ஆவிர்பா
வ:। தத் ... தாரகம் ॥

மனத்தோடு கூடிய அந்தர் திருஷ்டி தாரகப் பிரகாசத்தின்பொருட்டாகின்றது. இருபுருவங்களின் மத்திய பிலத்தில் தேஜசின் ஆவிர்ப்பாவமாம். இது பூர்வதாரகமாம்.

மூர்த்தி தாரகமோ மனதோடுகூடிய சட்சுவானே அறியப் படுகின்றது; ரூபக்கிரஹணப் பிரயோஜனமாய மனம் சட்சு ரதினமாகலின். பாகியத்தைப்போன்று அந்தரத்திலும் ஆத்ம, மன, சட்சு சம்யோகத்தானே ரூபக்கிரஹண காரியம் உதய மாகலின். பிரகிருதத்தில் மனதோடுகூடிய அந்தர் திருஷ்டி தாரகப் பிரகாசத்தின்பொருட் டாகின்றது. தாரகப்பிரகாச மென்பது இரண்டு புருவங்களின் மத்திய பிலத்தி லுள்ள திரு ஷ்டியாம். அதன் வாயிலாய் மேலிடத்துள்ள தேஜசின் ஆவி ர்ப்பாவ முண்டாகின்றது. அதனால் அவ்விதங் கூறப்படுகின் றது. அதனோடுகூட மன சம்பந்த தாரகம் நன்கு சேர்க்கப் பட்ட பிரயத்தனத்தால் இரு புருவங்களைச் சாவதானமாக மேலே கிஞ்சிற் றெழுப்புக. அதனால் க்ஷணத்தில் நன்குவிழிக் குங் காரண முடையதாகின்றது. இது பூர்வதாரகத்தின் பொரு ளாம்.

உத்தரம் த்வமநஸ்கம்। தாலுமூலோர்த்வபாகே மஹாஜ்யோதிர்வித்யதே। தத்தர்சநாதணிமாதி ஸித்தி:। லக்ஷ்யேऽந்தர்பாஹ்யாயாம் த்ருஷ்டௌ நிமேஷோந்மேஷவர்ஜிதாயாம் ச இயம் சாம்பவீ முத்ரா பவதி। ஸர்வதந்த்ரேஷு கோப்யமஹாவித்யா பவதி। தஜ்ஞாநேந ஸம்ஸார நிவ்ருத்தி:। தத்பூஜநம் மோக்ஷபலதம்॥

உத்தரமோ அமநஸ்கம். நாவின் மூல ஊர்த்துவ பாகத்தில் மஹா ஜோதி யிருக்கின்றது. அதன் தரிச னத்தால் அணிமாதி சித்தியாம். உள்ளிலும் வெளி யிலு முள்ள லட்சியத்திலும், இமைப்பு விழிப் பின்றிய திருஷ்டியிலும் இச் சாம்பவிமுத்திரை யுண்டாகின்றது. சர்வ சாஸ்திரங்களிலும் ரகஸ்யமாக வுள்ள மகாவித் தையாகின்றது. அதன் ஞாநத்தால் சம்சார நிவிர்த்தி யாம். அதன் பூஜை மோட்ச பலத்தைக் கொடுக்கின்றது.

மேலோ, அமூர்த்த அமனஸ்கம் என்னு மதுவே ராஜ யோகமாம். அதன் லட்சணம் அதிவிசித்திரமாகக் கூறப்படு கின்றது. யோக ஜோதிக் குண்டத்தில் சித்தமாய அத்வர்யு வால், புத்தியாய ஹோத்ருவால், அகங்காரமாய உத்காதாவோடு மனமாய யஜமானன், பிராணேந்திரியங்களாய ஹவிசுக்களைத் தியாகஞ் செய்கின்றான். இந்த யாகத்தால் நிர்மல ஸ்வரூப மான யஜமானன் சர்வ தேவ ரூபமாகின்றான்; எல்லோராலும் உபாசிக்கத் தக்கவனாகின்றான்.

இது பொருளாம். "ஆட்டின் ஹிருசயம், மேதசு கூறு" என்று பசு மனங்கட்கு ஹோமரூப லயார்த்தம் பிராப்த மாகுங்கால், மனம், புத்தி அகங்கார உபசம்மாரத்தை ஆசிரயிக் கின்றது. அவ்வித சித்தம், பிராணாதி ஹவிஸ் ஹோமத்தின் பின்னர் யஜமானனிடத்தில் லயத்தை அடைகின்றது. அந்த யஜமானன் யாக பல சித்தி யுடையவனாய், சமஸ்காரத்தி னதி சயத்தால் நன்கு விழிப்பான அவஸ்தையை யடைந்து, ஸ்வர்க்க பல நிர்விஷய பரமாத்மாவினிடத்தில் லீனமாகின்றான். இது ராஜயோகத்தின் அதிசயமாம்; மனோலயம் வேறு பிரகார மாகப் பொருந்தாமையின்.

நாவின் மூலத்தின் மேற்பாகத்தில் பெரிய ஜோதிமண் டல மிருக்கின்றது. அது யோகிகளால் தியானித்தற்கு யோக் யம்; அணிமாதி சித்தியைக் கொடுப்பது மாகின்றது.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌜𑌲𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌭𑌵𑌤𑌿। 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌦𑍃𑌶𑍍𑌯𑌂। 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍇 𑌜𑌲𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂। 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌰𑍇। 𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍। 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇। 𑌉𑌕𑍍𑌤𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌵। 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮

த்ருஷ்ட்யா வா ய: பஶ்யதி ஸ ஏவ ப்ரஹ்மநி
ஷ்டோ பவதி | ஜீவ: பஞ்சவிம்ஶக: ஸ்வகல்பித
சதுர்விம்ஶதி தத்த்வம் பரித்யஜ்ய ஷட்விம்ஶ:
பரமாத்மாஹமிதி நிஶ்சயாஜ்ஜீவந்முக்தோ பவதி |
ஏவமந்தர்லக்ஷ்ய தர்ஶநேந ஜீவந்முக்திதஶா
யாம் ஸ்வயமந்தர்லக்ஷ்யோ பூத்வா பரமாகாஶா
கண்டமண்டலோ பவதி ||

இதி ப்ரதமம் ப்ராஹ்மணம் ||

அந்தர் லட்சியம் ஜலஜோதி சொரூபமாகின்றது; மகரிஷியா லறியத்தக்கது; அந்தர் பாஹ்ய இந்திரியங்களா லறியத்தக்க தன்று. சஹஸ்ராரத்தில் ஜலஜோதி அந்தர் லட்சியமாம். புத்திக் குகையில் சர்வாங்க சுந்தரமாய புருஷரூபம் அந்தர் லட்சியமென்று அந்நியர் கூறுகின்றனர். சிரசினுள் ளிருக்கும் மண்டல மத்தியத்தி லுள்ள பஞ்ச முகங்களையும், நீல கண்டத்தையு முடைய பிரசாந்தமாய உமாசகாயனை அந்தர்லட்சியமென்று சிலர் கூறுகின்றனர். அங்குஷ்ட மாத்ர புருஷன் அந்தர் லட்சிய மென்று ஒருவர் கூறுகின்றனர். கூறிய சர்வ விகற்பமும் ஆத்மாவே. அந்த லட்சியத்தைச் சுத்த ஆத்ம திருஷ்டியால் எவன் பார்க்கின்றான் அவன் பிரஹ்ம நிஷ்டனாகின்றான். இருபத்தைந்து தத்துவங்களை யுடைய ஜீவன் தன்னாற் கற்பிக்கப்பட்ட இருபத்து நான்கு தத்துவங்களைப் பரித்தியாகஞ் செய்து, இருபத்தாறாந் தத்துவமாய பரமாத்மா நான் என்னும் நிச்சயத்தால் ஜீவன் முக்தனாகின்றான். இங்ஙனம் அந்தர் லட்சிய தர்சனத்தால் ஜீவன் முத்தி தசையில் தான் அந்தர் லட்சியமாய்ப் பரம ஆகாச அகண்ட மண்டல மாகின்றான்.

முதற் பிராஹ்மணம் முற்றிற்று.

மூடுதல் விழித்த லின்றிய திருஷ்டியிலும் பாஹ்யத்திலும் ஆந்தரத்திலுமுள்ள லட்சியத்திலும் இச்சாம்பவி முத்திரை யுண்டாகின்றது. சர்வ சாஸ்திரங்களிலும் ரகஸ்யமான மகாவித்தையு மாகின்றது; சம்சார நிவிர்த்தியாய பலத்தை அதுவே உண்டாக்குகின்றது. அம் முத்திரையை யறிந்தவன் வசித்தலால், பூமி பவித்திரமாகின்றது. அவனைத் தரிசித்து உலகத்திலுள்ள எல்லோரும் பவித்திரத்தன்மையை யடைகின்றனர் என்பது பரமார்த்தமாம். அவ்வித பரமயோகி பூஜை எவனுக்குக் கிடைக்கின்றது அவனுக்கு முக்தி யிருக்கின்ற தென்பது தாத்பர்யமாம்; அவனுக்கும் அந்தர்லட்சிய சம்பந்த திடச்சித்த மிருத்தலின்.

அந்தர் லட்சியமோ, ஜலஜோதி சொரூபமாகின்றது. "ஜலம், ஜோதி, ரசம், அமிர்தம், பிரஹ்மம், பூ, புவ, சுவ (லோகம்), ஓம்' என்னும் காயத்ரி சிரசால். அவ்வந்தர் லட்சியமே, பரப்பிரஹ்மமும், ரகஸ்யத்திலும் ரகஸ்யதரமும், மகரிஷியா லறியத்தக்கது மாம். "இவ்வாத்மா பூர்ணம்" என்னு மிதனால், பாஹ்ய இந்திரியங்களால் பார்க்கப்படுவ தின்று. "உள்ளிருப்பது" என்னு மிதனல் மனத்தானும் அந்தப் பிரஹ்மம் அறியப்படுவ தின்று. பின்னையோ பரம குரு உபதேசத்தால் சகஸ்திராரத்தில் ஜலஜ்ஜோதி மேலான அந்தர் லட்சியமாகின்ற தென்று கூறுகின்றனர். சிலர் புத்திக்குகையில் சட்சு, சுரோத்திராதி பரிபூர்ண அங்கத்தோடு சிருஷ்டி ஸ்திதி லய மின்றிய பரமாத்மா சர்வத்தையும் அறிந்து அந்தர் லட்சியமென்று ரகஸ்யமாகவே அதனைக் கூறுகின்றனர். இன்னுஞ் சிலர் சிரசினுள் ளிருக்கும் ஆகாச சூர்யமண்டல மத்திய லுள்ள ஐந்து முகங்களையும் நீல கண்டத்தையு முடைய சாந்தனுய உமா சகாயனை அந்தர் லட்சிய மென்று கூறுகின்றனர். அங்குஷ்டமாத்ர புருஷன் த்விதல அந்தர் லட்சிய மென்று கூறுகின்றனர். "அங்குஷ்டமாத்ர புருஷன் ஜோதி போன்று தூம மின்றியவன்", "அந்த ஆத்மாவை வித்வான் இங்ஙனம் அங்கீகரித்து அமிர்தத்தினின்று மமிர்தமான பிரஹ்மம்", "அங்குஷ்டமாத்ர புருஷன் அங்குஷ்டத்தை யாசிரயித்த ஈசுவரான்

சர்வ ஜகத்திற்கும் பிரபு உண்டாக்குகின்றான், விஸ்வத்தைப் புஜிக்கின்றான்'' என்னுஞ் சுருதிகளானும், தசேந்திரிய புரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் ஜீவாத்மாவைப் பிரஹ்மத்தோடு கூட ஐக்ய பாவனையால், சாத்திய அத்வைத விருத்தியாலாவது அல்லது சுத்தாத்வைத விருத்தியாலாவது எவன் பார்க்கின்றான் அவனே பிரஹ்ம நிஷ்டனாகின்றான். 25 தத்துவங்களையுடைய ஜீவன் தன்னாற் கற்பிக்கப்பட்ட 24 தத்துவரூபப் பிரகிருதியைவிட்டு (சங்கத்தை விட்டு என்பது பொருள்) 26-ந் தத்துவத்தை யுடைய பரமாத்மா நானென்று எவன் நிச்சயஞ் செய்கின்றான் அவன் ஜீவன் முக்தனாகின்றான்.

இங்ஙனம் அநேகப் பிரகாரமாகக் கூறிய அந்தர் லட்சிய தர்சனத்தால் ஸ்வயமேஅந்தர் லட்சிய ஆகாசமாகின்றான். அதுவே நாத பிந்து களங்களின் மூலமாகின்றது. எதனால் நாதாதி உத்பத்தியும் பிரஹ்மத்தினின்றும் உண்டாகின்றதென்னும் நிகமத்தால்.

யோகசாஸ்திரத்தில் முதற் பிராஹ்மணத்தின்
ராஜயோக பாஷ்யம் முற்றுப்பெற்றது.

இரண்டாம் பிராஹ்மணம்.

அத ஹ யாஜ்ஞவல்க்ய ஆதித்யமண்டலபுரு
ஷம் பப்ரச்ச। பகவந்நந்தர்லக்ஷ்யாதிகம் பஹு
தோக்தம், மயா தந்ந ஜ்ஞாதம்; தத்ப்ரூஹி மஹ்யம்॥

யாஞ்ஞவல்கியர் ஆதித்யமண்டல புருஷனை யடைந்தார். ஏ பகவன்! அந்தர்லட்சியாதிகளை அநேகப் பிரகாரமாகக் கூறப்பட்டது. அஃது என்னால் அறியப்படவில்லை. அதனை யென்பொருட்டுக் கூறும்.

இங்ஙனம் உபதேசித்த பிராகிருத பரமயோகியைக் குறித்து இதனைக் கூறுகின்றார்.—என்று அநேகப் பிரகாரமாக

உம்மாற் கூறு மிடத்து ஆத்மஸ்தானத்தை முக்கியமாக என்னுல் அறியப்படாமை போன்று சாமாந்யார்த்த ஆஸ்பதமாய் விட்டது. அஃது ஆதரத்தோடு கூறத்தக்கது.

𑌤𑌤𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑌡𑌿𑌤𑍍𑌕𑍂𑌟𑌾𑌭𑌂 𑌤𑌦𑍍𑌵𑌚𑍍𑌚𑌤𑍁𑌃𑌪𑍀𑌠𑌂 | 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿 | 𑌸𑍋𑌽𑌤𑌿𑌗𑍂𑌢 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 | 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑌾𑌧𑌿𑌰𑍂𑌢𑍇𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 | 𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 | 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌜𑌗𑌲𑍍𑌲𑍀𑌨𑌂 | 𑌤𑌨𑍍𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌾𑌤𑍀𑌤𑌮𑌖𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 | 𑌤𑌤𑍍𑌸𑌗𑍁𑌣𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 | 𑌤𑌦𑍍𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 |

அதனைக் கூறுகின்றூர். பஞ்சமகாபூதகாரணம் தடித்கூடப் பிரகாசம் (என்று கூறப்படுகின்றது) அது போன்று சதுப்பீடமாம். அதன் மத்தியில் தத்துவப் பிரகாசம் உண்டாகின்றது. அஃது அதிகூடமும், அவ்யக்தமுமாம். அது ஞான வோடத்தி லேறி யிருப்பவனு லறியத்தக்கது. அது பாகியாந்தர லட்சியம். அதன் மத்தியில் ஜகத் லீனமாம். அது நாத பிந்து களாதீத அகண்ட மண்டலமாம். அது சகுண நிர்க்குண சொரூபமாம். அதனை யறிகின்றவன் முக்தனுகின்றூன்.

கூறப்படுகின்றது.—பஞ்சபூதாதி வர்ணத்தோடு கூடிய அது திரி கூடஸ்தல மெனப் பிரசித்தமாம். அதுபோன்று சதுப்பீடமாம். அதன் மத்தியில் தத்துவப்ரகாச மிருக்கின்றது. அது அதிகூடமும், அதிரம்யமும் அவ்யக்தமுமாம். அதுவே ஆத்ம ஸ்தான மென்று குருவால் ஞான ஓடத்தி லேறி யிருப்பவனு லறியத்தக்கது. அது பாஹ்ய ஆந்தர மத்திய அந்தர் லட்சியமா யிருக்கின்றது. அதன் மத்தியில் சர்வ ஜகத்தும் லீனமென்று அறியத்தக்கது. மற்றும், அதுவே ரமிக்கத்தக்கது;

நாத பிந்து கலையோடு கூடியது; சகுண நிர்க்குணமா யிருக்கின்றது; மேலான நேத்திர உத்சவ காரணமாம் நித்ய ஆத்ம ஸ்தலமாம். "ஜலம் ஜோதி" என்னும் சுருதியால் ஸ்ரீமந் நாராயணனது ஸ்தலம் பிரசித்தமாம். அதனை யறிபவன் முத்தி யடைந்தவ னாகின்றான்.

𑌆𑌦𑌾𑌵𑌗𑍍𑌨𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌂, 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌂,
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌧𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌣𑍍𑌡𑌲𑌂, 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌖𑌣𑍍𑌡
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋𑌮𑌣𑍍𑌡𑌲𑌂, 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍋𑌟𑌿𑌵𑌚𑍍𑌛𑍁𑌕𑍍𑌲
𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑌂, 𑌤𑌦𑍇𑌵 𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

ஆதியில் அக்நி மண்டலம். அதன் மேல் சூரிய மண்டலம். அதன் மத்தியில் சுதா சந்திர மண்டலம். அதன் மத்தியில் அகண்டப் பிரஹ்ம தேஜோ மண்டலம். அது மின்னலின் பிரகாசம் போன்று சுக்ல பாஸ்வரம். அதுவே சாம்பவி லட்சணமாம்.

